மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஏதாவது தவறான தகவலைத் தந்திருந்தால் உரிய அதிகாரிகள் மீது சரியான நடவடிக்கை மேற்கொள்ளலாம். ஆனால் அப்படியே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்காமல் இருந்தாலும் மீதம் 4 இருக்கிறது. எனவே, உங்களைப் பொறுத்த வரையில் அந்த ஒன்றியத்தின் மக்கள் தொகைக் கணக்குப்படி 3 தான் தேவை. ஆனால், எப்படியோ அங்கே 5 தந்திருப்பதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அதைப்பற்றி ஆய்வு செய்யலாம். ஆனால், நிச்சயமாக இப்போது ஆரம்பிப்பதற்கு அதிலே சாத்தியக்கூறு இல்லை. எதிர்காலத்திலே இதைப்பற்றி, அதாவது மக்கள் தொகை ஆய்வைக் குறைக்கிற போது, அந்த நேரத்திலே இதைப்பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் ஆரம்பிக்கவில்லை என்று சொல்கிற ஊர் இருந்தால் அதிலே ஆரம்பிக்கலாம். (குறுக்கீடு) இரண்டு கேள்விதான்.

(ஆ) பழவந்தாங்கல் இரயில்வே சுரங்கப்பாதையைப் பயன்படுத்த சாலை வசதி அமைக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு திருவாளர்கள் ப. ரங்கநாதன், டி. சுதர்சனம் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னைக்கு அருகாமையில் உள்ள பழவந்தாங்கல் இரயில்வே நிலையத்தில், பல இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பழவந்தாங்கல் இரயில்வே சுரங்கப் பாதையைப் பயன்படுத்தும் வகையில் சாலை வசதி அமைக்காதது குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

அரசின் 53 எண்ணிட்ட 17—1—1986 நாளிட்ட போக்கு வரத்துத் துறையின் ஆணையில் பழவந்தாங்கல் இரயில் நிலையம் அருகே நங்கநல்லூர் சாலையில் கி.மீ. 0/6-இல் இருப்புப்பாதை சந்திப்பு கடவிற்கு பதிலாக கீழ்ப்பாலம் கட்டும் பணிக்கு ஒப்புதல் 1988 நாளிட்ட அரசு ஆணை எண் 951இல் அளிக்கப்பட்டது. 20—9—1988 அன்று நில எடுப்புச் சட்டம் பிரிவு 4(1)ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்டது. 3.10.1988 அன்று நில எடுப்புச் சட்டம் பிரிவு 6ன் கீழ் (அவசர காலப் பிரிவின் கீழ் urgency clause) வரைவு விளம்பல் அறிவிக்கை வெளியிடப்பட்டது. மொத்தம் 1,608.5 சதுர மீட்டர் நிலத்தில் 0.169.5 சதுர மீட்டர் நிலமே நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. நில எடுப்பினை 5-ஏ பிரிவின் கீழ் விசாரணை இன்றி அவசர காலப் பிரிவின்கீழ் கையகப்படுத்த ஆணையிடப்பட்டதால், இதனை எதிர்த்து எட்டு பேர் உயர்நீதிமன்றத்ல் மேல் முறையீடு செய்ததால் உயர்நீதி மன்றம் 5ஏ பிரிவின்கீழ் விசாரணை மேற்கொள்ளுமாறு தீர்ப்பாணை பிறப்பித்தது.

2. இணை ஆணையர், நில நிர்வாகம், மாவட்ட வருவாய் அதிகாரி செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் மற்றும் இணைச் செயலர் (சட்டம்) உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் 27—4—92 அன்று பொதுப்பணித் துறையின் செயலர் இது குறித்து ஒரு விவாதம் செய்தார். விவாதத்தின் முடிவில் நில எடுப்புப் பிரேரணைகளை சாதாரணப்பிரிவின் கீழ் மேற்கொள்ள வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. இதற்கிணங்க சுற்றாணைக் குறிப்பில் ஆணை பெறப்பிட்டபின் மாவட்ட வருவாய் அலுவலர் செங்கற்பட்டு மாவட்டம் அவர்கள் நில நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலோடு நில எடுப்புச் சட்டம் பிரிவு 4(1)ன் கீழ் அறிவிக்கையை அனுப்புமாறு கோரப்பட்டார். அவ்வாறு நில நிர்வாக ஆணையர் 17—7—1992 அன்று தனது பரிந்துரையுடன் மாவட்ட வருவாய் அதிகாரி அவர்கள் நில எடுப்புச் சட்டம் பிரிவு 4(1)ன் கீழான அறிவிக்கையை அனுப்பினார். 1,082 எண்ணிட்ட பொதுப்பணித்துறையின் 29—7—1992 நாளிட்ட அரசாணையில் 1,369.5 சதுர மீட்டர் நிலங்களை பிரிவு 4(1)ன் கீழ் கையகப்படுத்த ஆணை வெளியிடப்பட்டது. பிரிவு 6ன் கீழான வரைவு விளம்பல் அறிவிக்கை 20—4—1993 நாளிட்ட, 609 எண்ணிட்ட அரசு ஆணையில் வெளியிடப்பட்டது. மேலும், இது குறித்த பிரிவு 7ன் கீழான வரைவுக்கட்டளை 10—6—1993 அன்று வெளியிடப்பட்டது. நில மதிப்பீட்டுப்பட்டியல் மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களால் தயாரிக்கப்பட்டு நில நிர்வாக ஆணையரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. நில நிர்வாக ஆணையர் நில மதிப்பீட்டு ஒப்புதல் அளித்த பின்னர் தீர்ப்பாணை மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களால் விரைவில் வழங்கப்படும். மாவட்ட வருவாய் அதிகாரி அவர்கள் இது குறித்து 8—4—1994 அன்று நினைவூட்டப்பட்டார்.

திரு. ப. ரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, பழவந்தாங்கல் என்பது பல சிறிய சிறிய நகரங்களைக் கொண்ட பெரிய நகரமாக அந்தப் பகுதியிலே வளர்ந்து வருகிற நகரம். ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன்பு அங்கே இரயில்வே துறை அந்தப் பாலத்தைக் கட்டி முடித்தும், இப்போதும் அங்கே சாலை வசதியில்லாத காரணத்தால் அந்தக் கீழ்ப்பாலம் பயன்பெறாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையிலே, பல கட்டங்களில் பல்வேறு விதமான நடவடிக்கைகளை எடுத்தது பற்றி இங்கே சுருக்கமாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். இருந்தாலும் வெகு விரைவில் அந்தச் சாலையை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழவந்தாங்கல் பகுதியிலே இருக்கின்ற இந்தப் பிரச்சினையை நம்முடைய அரசு பொறுப்பு ஏற்ற உடனேயே நானும் நம்முடைய ஆலந்தூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணாமலை அவர்களும் அந்த இடத்தை ஏற்கெனவே சென்று பார்வையிட்டு, எந்தக் காரணத்தினால் இந்தப் பணிகள் தடைபட்டுபோய் இருக்கின்றன என்பதை நேரடியாக விசாரணை செய்தோம். கடந்த காலத்திலே 20—9—1988 அன்று அர்ஜென்ஸி கிளாஸில் அந்த லேண்டு அக்குயுசிஷன் புரசீடிங்ஸ் வெளியிடப்பட்ட காரணத்தாலே தங்களுக்கு தகவல் தரவில்லை என்று அந்த நிலத்துக்குச் சொந்தக்காரர்கள், அங்கே இருக்கிறவர்கள் எல்லாம், உயர்நீதி மன்றத்துக்குச் சென்று வழக்கினைத் தொடுத்து முறைப்படி அவை எல்லாம் விசாரிக்கப்பட வேண்டும் என்று உயர்நீதி மன்றத்திலே இருந்து தகவல் அனுப்பப்பட்டு, அந்த அடிப்படையிலே நம்முடைய அரசு அந்த புரசிஜர்படி, அந்த விதிமுறைகளின்படி இன்றைக்கு நோட்டீஸ் கொடுத்து இருக்கிறோம். நிலத்தை கையகப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கும், நில நிர்வாக ஆணையாளர் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரிகள் இவாகளோடும் எல்லாம் பொதுப்பணித் துறைச் செயலாளரையும் அழைத்து ஒரு விவாதம்கூட நடத்தி மிகத்துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற காரணத்தினாலேதான் பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் எடுத்தோம். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு இறுதிக்கட்டத்திற்கு வந்து இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இந்த விவரங்கள் எல்லாம்—நான் அந்த அறிக்கைக்குள்ளே போக விரும்பவில்லை- தெளிவாக அந்த விவரங்களை நான் சொல்லி இருக்கிறேன்;, இன்றைக்கும் நம்முடைய வருவாய்த்துறை அதிகாரிகளிடத்திலே மேல் அதிகாரிகளிடத்திலே மாவட்ட வருவாய் அதிகாரிகளிடத்திலே பொதுப்பணித் துறை அதிகாரிகள் வலியுறுத்திக்கொண்டு

1994 மே 5]. [திரு. எஸ். கண்ணப்பன்]

இருக்கிறார்கள். நிதியும் இருக்கிறது. மிக விரைவிலேயே அந்த நோட்டீஸ் எல்லாம் கொடுக்கப்பட்டு, முறைப்படி அந்தப் பணிகள் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே அந்தப் பகுதியிலேஎன்னென்ன பாதிப்புக்கள் ஏற்பட்டு இருக்கின்றனஎன்பதையும், வாகனங்கள் அங்கே எவ்வளவு தூரம் அதிகமாக நிற்க வேண்டி இருக்கிறது எனபதையும் நானே நேரிலே பார்த்து இருக்கிறேன். அது சம்பந்தமாக நீதிமன்றத்தினுடைய ஆணை இருக்கின்ற காரணத்தினாலேதான் அவற்றை இந்த அரசு முறைப்படி செய்ய வேண்டி இருக்கின்ற காலக்கெடுவின் காரணமாகத்தான், இன்றைக்கு பணிகளிலே கொஞ்சம் காலதாமதம் ஆகி இருக்கிறது. ஆக, அது சம்பந்தமாக அவசர அவசியமான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பழவந்தாங்கல் பாலம் 1988-லே துவக்கப்பட்டு இப்போது, 6 ஆண்டுகள் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்தும்கூட இன்றைக்கு முடிவுபெறாத ஒரு நிலை இருக்கிறது. கடைசியாக 8—4—1994 அன்று மேல் நடவடிக்கைக்காக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு மாவட்ட வருவாய் அதிகாரிக்கு கடிதம் எழுதி இருப்பதாக இந்த அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள் எப்படியாவது, அந்தப் பகுதி மக்களின் துன்பத்தைப் போக்குகின்ற வகையில்—இப்போது நீதிமன்ற ஆணைக்காக காத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதையும் உடனடியாக விரைவாகச் செய்து அந்த மக்களுக்குச் சாலை அமைத்துக் கொடுத்து, அந்த மக்களுடைய துன்பத்தைப் போக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, மறுபடியும் நம்முடைய வருவாய்த்துறை அதிகாரிகளை பொதுப்பணித் துறை அதிகாரிகளை அழைத்துப் பேசி அட்வகேட் ஜெனரல் அவர்களிடத்திலேயும் இது சம்பந்தமாகப் பேசி இருக்கிறேன். வழக்குகளை உடனடியாக முடிவு செய்ய வேண்டும் என்று பேசி இருக்கிறேன் இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்த காரணத்தாலே, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம் மறுபடியும் உடனடியாக அழைத்துப் பேசுவதற்கு இரண்டு துறை அதிகாரிகளுக்கும் அது சம்பந்தமாக இன்றைக்கு தாக்கீது அனுப்பப்பட்டு இருக்கிறது. மறுபடியும் நானே அவர்களை நேரில்

அழைத்துப் பேசி இது சம்பந்தமாக விரைவிலே முடிவு எடுத்து, நீதிமன்றத்திலே அந்த வழக்குகளைத் தீர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்து விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) கவன ஈர்ப்புக்கு இதுவரை வந்த பதில்கள் அவையில் வைக்கப்பட்டுள்ளது குறித்தும் இனிவரும் பதில்கள் தபால் மூலம் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுவது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 2 கவன ஈர்ப்பு எடுக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் பேரவையில் 79 கவன ஈர்ப்புகளுக்கான பதில்கள் வைக்கப் பட்டு இருப்பதை உறுப்பினர்கள் பார்க்கலாம். அவை தவிர, ஏனைய உறுப்பினர்களுக்குப் பதில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இந்த அளவுக்கு நாள்தோறும் 2 வீதம் எடுத்து கடைசியில் 79 கவன ஈர்ப்புகளுக்குப் பதிலுரை வைத்தது என்பது நம்முடைய சட்டமன்ற வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கை களை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். டாக்டர் மணிமேகலை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பில்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக குழுவின் 147 மற்றும் 148 ஆகிய இரண்டு அறிக்கைகளை பேரவைக்கு அளிக் கிறேன்.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழு